உண்மைதான். மாநிலத்தின் வளர்ச்சிக்கு இதுமிகவும் அவசியமான இடுபொருள் என்று கூறி இருக்கிறார்கள். அதுவும் மறுக்க முடியாத உண்மைதான். விவசாயப் பணிகளை அதிக அளவில் இயந்திர மயமாக்குதல் மூலை முடுக்குகளிலும் உள்ள மக்களுக்கும் இதன் பயன்களை நீட்டித்தல் ஆகியவற்றின் காரணமாக மின் சக்தியின் பயன்பாடு அதிக அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மைதான். மிகச் சிறந்த முறையிலும், சிக்கனமாகவும் இம்மாநிலத்தின் மின் உற்பத்தி, மின் அனுப்புகை, மின் பங்கீடு ஆகிய பணிகளை ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மைதான் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைப் பேரவைக்கு நல்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எனது சில கருத்துக்களை இந்த மாமன்றத்திற்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 12-30

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)

தேவைக்கு மிகுதியான இடுபொருள் ஒன்றை உற்பத்தி செய்கிறபோது, சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. இதிலே முக்கியமாக வருவது உற்பத்தி; அடுத்து உற்பத்தி செய்த பொருளை பங்கீடு செய்வது; அப்படி பங்கீடு செய்யும்போது ஏற்படுகிற இழப்பைச் சரிக்கட்டுவது என்பது பற்றி எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரையில் இருக்கிறது. இவற்றோடு சேர்த்து, இப்படி ஒரு இடுபொருளை உற்பத்தி செய்யும்போது அதை எவ்வாறு மிச்சப்படுத்த வேண்டுமென்பது பற்றிய கருத்து எதுவும் அதில் இல்லை. ஆகவே மின் வாரியத்திற்கு என்னுடைய கருத்தாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பொருளை எவ்வளவுதான் உற்பத்தி செய்தாலும், அந்தப் பொருளை மிச்சப்படுத்துகின்ற ஒரு முறையையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். மின்சாரத்தை மிச்சப்படுத்தல் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். இதிலே முதலாவதாக நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் இதை உபயோகிப்பவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட வழிவகைகளைச் செய்ய வேண்டும். மின்சாரத்தைக் குறைந்த அளவுக்கு எடுத்துக்கொண்டு, மிச்சப்படுத்தும் கருவிகளை நாம் உபயோகப்படுத்த வேண்டும். இதுபோன்ற கருவிகளைக் கண்டுப்பிடித்தவர்களைக்கூட நாம் பாராட்ட வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். உதாரணத்திற்கு குழல் விளக்கு பற்றிய ஒரு கண்டுபிடிப்பை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இதை நான் கூறும்போது, பல பேருக்கு இது அதிசயமாகக்கூட இருக்கலாம். ஆனால் உண்மை இன்றைக்கு ஒரு நிறுவனம் ப்யூஸ் போன டியூப் லைட்டுகள்

எரியக்கூடிய ஒரு கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்திருக்கிறது. அப்படிக் கண்டுபிடித்ததோடு மட்டுமல்லாமல், புதிய கண்டு பிடிப்புக்கும், ஏற்கனவே இருக்கும் விளக்குக்கும் எவ்வளவு வித்தியாசம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு கன்வென்ஷனல் சிஸ்டத்தில் ஒரு குழல் விளக்கு 60 வாட்ஸ் மின்சாரம் எடுக்கிறதென்றால், புதிதாகக் கண்டுபிடித்துள்ள புதிய குழல் விளக்கு—இதற்கு பிளாஸ்மா சோக்லஸ் சிஸ்டம் என்று பெயர்—50 வாட்ஸ் மின்சாரத்தைத்தான் எடுத்துக் கொள்ளும். ப்யூஸ் போன பல்பைப் போட்டால்கூட எரியும். அடுத்து பவர் லாஸ் என்றுபார்க்கும்போது கன்வென்ஷனல் சிஸ்டத்திலே 20 வாட்ஸ் என்று சொன்னால் புதிய கண்டு பிடிப்பான பிளாஸ்மா சிஸ்டத்திலே 15 வாட்ஸ்தான். ஆப் பரேடிங் வோல்டேஜ் என்று எடுத்துக்கொண்டால், இன்றைக்கு கன்வென்ஷனல் சிஸ்டத்தில் இருக்கும் குழல் விளக்கு எரிய 190 வோல்ட்ஸ் மின்சாரம் வேண்டுமென்றால், பிளாஸ்மா சிஸ்டத்தில் 140 வோல்ட்ஸ் போதும். இன்றைக்குப் பல கிராமங்களுக்குச் செல்லும்போது அங்கே இருக்கும் பொது மக்கள் குழல் விளக்கே எரியவில்லை என்று சொல்லு கிறார்கள். காரணம், மின் அழுத்தம் சரியாக இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே 140 வோல்ட்ஸ் மின்சாரம் வந்தால்கூட குழல் விளக்குகள் எரியும். மேலும் இந்தப் புதிய கண்டுபிடிப்புகளைப் பொருத்துவதன் மூலம் ப்யூஸ் போன குழல்விளக்குகள்கூட எரியும் தன்மை இருக்கிறது. எனவே இந்தப் பிளாஸ்மா சிஸ்டம் எப்படி வேலை செய்கிறது என்பதைச் சுருக்கமாகக் கூற விரும்பு கிறேன்.

The flourescent tubes are filled with a particular gas and inside walls are coated with a powder which will emit light when electrons are thrown on it on both sides. The ionisation has been done in ordinary tube light systems by heating two filaments provided on both sides of the tubes. In Plasma system, this is done by generating high frequency electrons. This has been designed based on the Surface Mount Technology. Because of this technology, the Plasma System operates by the high frequency electrons and so this system does not need any filament continuity. Because of this, the fused tubelights are working with this system,

பிற்பகல் 12-35

இதுபோன்ற நவீன கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிப்பதன் மூலமாக இன்றைக்கு மின்சாரம் அதிகமாகச் செலவாவதை நம்மால் மிச்சப்படுத்த முடியும். இதுபோன்ற எல்லாத் துறைகளிலும் சிறியது முதல் பெரியது வரை நவீ